# III. மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1970ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதிக் கணக்குகள். பின்னிணைப்பு II இன் அட்டவணை (19)இற் கொடுக்கப்பட்டுள்ளன. 1970 திசெம்பர் இறுதிக்குரியனவற்றை 1969ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து உள்ள முக்கிய மாற்றங்கள்:—

| | மாற்றம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) |
|---|---|
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் ... .. | + 65.4 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் ... .. | — 122.3 |
| கேள்வி வைப்புக்கள் ... ... (இவற்றில் வர்த்தக வங்கிகள் + 87.5) | + 32.0 |
| வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்பாடுகள்... ... | + 155.6 |
| பன்னாட்டு ஒதுக்கு நிதி ... .. | + 28.8 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் ... ... (இவற்றில் அரசாங்க, அரசாங்க உத்தரவாதம் பெற்ற பிணைகள் + 126.2) | + 154.4 |

+ அதிகரிப்பு — குறைவு

இவ்வாண்டில் ஸ்டேர்லிங், இந்திய ரூபாய்கள், ஐ. அ. டொலர்கள் என்பனவற்றைப் பொறுத்தவரையில், மத்திய வங்கியின் மாற்று வீதங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அவை பின்வருமாறு:—

| | | தந்தி மாற்றுக் கொள்வனவு | தந்தி மாற்று விற்பனை |
|---|---|---|---|
| ஸ்டேர்லிங் | உடன்மாற்று | 1சி. 4 53/64பெ. | 1சி. 4 13/16பெ. |
| (இலங்கை ரூபா ஒன்றிற்கு) | எதிர்காலமாற்று (ஆறு மாதங்கள் வரை) | உடன்மாற்றிற்கெதிராக 1/128 பெ. மாதாந்தக் கழிவு | உடன்மாற்றிலிருந்து 1/28 பெ. மாதாந்த ஏற்றம் |
| இந்திய ரூபாய்கள் | உடன்மாற்று | ரூ. 79 1/8 | ரூ. 79 3/16 |
| (100உக்கு) | எதிர்கால மாற்று (6 மாதங்கள் வரை) | உடன்மாற்றிற்கெதிராக 1/32 ரூ. மாதாந்தக் கழிவு | உடன்மாற்றிலிருந்து 1/32 ரூ. மாதாந்த ஏற்றம் |
| ஐ. அ. டொலர்கள் | உடன்மாற்று | ரூ. 595.25 | ரூ. 595.50 |
| (100உக்கு) | எதிர்கால மாற்று (மூன்று மாதங்கள் வரை)* | ரூ. 595.25 | உடன் மாற்றிற்கெதிராக -/25 சதம் மாதாந்த ஏற்றம் |

மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் பின்னிணைப்பு II இன் 24 ஆம் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

* மத்திய வங்கிக்கான குறிப்பிட்ட விண்ணப்பங்கள் மீது மூன்று மாதங்களுக்கு மேற்பட்டதும் ஆறு மாதங்களுக்கு உட்பட்டதும்.

அரசாங்கப் பிணைகளையும் வர்த்தகம், உற்பத்திக் கடன்கள் தொடர்பான கடன் வாக்குறுதிச் சான்றிதழ்களையும் ஆதாரமாகக் கொண்டு அளிக்கப்பட்ட முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் 1970 சனவரி 11ஆந் திகதி தொடக்கம் 6½ சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழான நெற் கொள்வனவுக்கும், உள்ளூரில் பயிரிடப்பட்ட விவசாயப் பொருட்களின் கொள்வனவு, விற்பனை அல்லது களஞ்சியப்படுத்தல் என்பவற்றிற்கும், நிதியீட்டுவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பாக, கடன் வாக்குறுதிச் சான்றிதழ்களை ஆதாரமாகக்கொண்டு வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் ஆண்டுக்கு 3 சதவீதமாக மாற்றமின்றித் தொடர்ந்திருந்தது. நெல், வெங்காயம், பம்பாய் வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு, அன்னுசி, காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தி தொடர்பாக, கூட்டுறவுச் சங்கங்களின் கடன் வாக்குறுதிச் சான்றிதழ்களை ஆதாரமாகக் கொண்டு வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிடம் பெற்ற முற்பணங்களின் வட்டி வீதம் ஆண்டிற்கு 1½ சதவீதமாகத் தொடர்ந்திருந்தது. ஆனல் இவ் வசதியைப் பயன்படுத்திக்கொள்ளும் வர்த்தக வங்கிகள், வாக்குறுதிச் சான்றிதழ் வரைவோரிடம் ஆண்டிற்கு 8 சதவீதத்திற்கு மேல் (குறித்த திகதிகளில் பணத்தைத் திருப்பிக் கொடுக்குங்கால் ஆண்டிற்கு 3 சதவீதம் கழிவுக்குட்பட்டு) வட்டி அறவிடக் கூடாது. இறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கழிவு வீதம் கடைசியாக ஏற்கப்பட்ட சராசரிக் கேள்வி வீதத்திலிருந்து ஆண்டிற்கு 1/8 சதவீதமாகத் தொடர்திருந்தது.

**வெளிநாட்டு நாணயத் தாள்கள்**

மத்திய வங்கி, இலங்கையிற் தொழிற்படும் வர்த்தக வங்கிகளிடமிருந்து குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களைக் குறிக்கப்பட்ட விலைகளிலே தொடர்ந்து கொள்வனவு செய்து வந்தது.

**கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் நெல், வெங்காயம், பம்பாய் வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு, அன்னுசி, காய்கறிகள் என்பனவற்றின் உற்பத்திக்காகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கடன்களிற் செலுத்தத் தவறிய தொகையில் 75 சதவீதத்தை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கி ஈடுசெய்ய உத்தரவாதம் அளித்துவருகின்றது. உத்தரவாதக் கட்டணமாக வர்த்தக வங்கிகள் ½ சதவீதம் செலுத்த வேண்டும். 1970 இல் வர்த்தக வங்கிகளாற் கடன்களாக வழங்கப்பட்ட ரூ. 50,695,000 இற்கு மத்திய வங்கி உத்தரவாதம் அளித்தது.

**நடுத்தர, நீண்ட – தவணைக் கொடுகடன்**

இவ்வாண்டில் கொடுகடன் நிறுவனங்களுக்கு ரூ 2,22,52,000 தொகை கொண்ட மீள நிதியீட்டற் கடன்கள் வழங்கபட்டன. கொடுகடன் நிறுவனங்களுக்கு மத்திய வங்கியினல் வழங்கப்பட்ட மீள நிதியீட்டற் கடன்களின் மீதான வட்டி வீதங்கள் 1970, சனவரி 11 தொடக்கம் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டன.

(அ) விவசாயம் அல்லது கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டுக்கு 6½ சதவீதம்

(ஆ) தேயிலைக் கட்டுப்பாட்டாளர் வட்டித் தொகையில் ஒரு பகுதியினைக் கொடுக்குங்கால், தேயிலைத் தொழிற்சாலையைப் புதுப்பிக்கவும் அல்லது புதிய தொழிற்சாலை அமைக்கவும்:—

(i) உள்ளூர்ச் செலவின் மீள நிதியீட்டற் கடன்களுக்கு ஆண்டுக்கு 5 சதவீதம்.

(ii) வெளிநாட்டுச் செலாவணிச் செலவின் மீள நிதியீட்டக் கடன் களுக்கு ஆண்டுக்கு 7 சதவீதம்.

(இ) வாணிபம் அல்லது வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் வளர்ச் சிக்கு அல்லது அபிவிருத்திக்கு ஆண்டுக்கு $7\frac{1}{2}$ சதவீதம்.

**நாணய வெளியீடு**

1970ஆம் ஆண்டு இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த மொத்த நாணயம் ரூ. 10,904 இலட்சமாகும்; இது 1969ஆம் ஆண்டு இறுதியிலிருந்த தொகை யுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,223 இலட்சம் குறைவானதாகும். நாணயத் தாள்களின் சுற்றோட்டத்தில் ரூ. 1,280 இலட்சம் குறைவும் நாணயக் குத்தி களின் சுற்றோட்டத்தில் ரூ. 57 இலட்சம் அதிகரிப்பும் ஏற்பட்டது.

70· 10 26ஆந் திகதிக்கு முந்திய திகதியைக் கொண்ட எல்லா ரூ 100/– ரூ. 50/– நாணயத் தாள்களும் 70. 10. 25ஆந் திகதி தொடக்கம் நாணய மதிப்பு நீக்கஞ் செய்யப்பட்டு 70. 11. 3ஆந் திகதியிலிருந்து சட்டமுறைப்படி செல்லுபடியாகாதிருந்தன. நாணய மதிப்பு நீக்கஞ் செய்யப்பட்ட பழைய வடிவில் அமைந்த நாணயத் தாள்களைப் பதிலீடு செய்வதற்காக 70. 10. 26ஆந் திகதி ரூ 100/- ரூ. 50/- பெறுமதியுள்ள இரு புதிய நாணயத் தாள்கள் வெளியிடப்பட்டன. இத்தாள்கள் முற்றிலும் புதிய வடிவாக விளங்குகின்றன. இரண்டு வகைத் தாள்களினதும் முற்பக்கத்தில் மன்னன் மகாபராக்கிரம பாகுவின் சிலையினது உருவப்படிவம் காலஞ் சென்ற தலைமை அமைச்சர் திரு, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் உருவப்படியினுற் பதிலீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 100/- தாளின் பின்புறத்தில் சிகிரியா ஓவியம், முரசடிப்பவருடனுன மூன்று கண்டிய நடனக் காரர்களினுல் பதிலீடு செய்யப் பட்டிருக்க, ரூ. 50/– இன் பின்புறத்தில் முத்துப்போன்ற தோற்றமுடைய சந்திர வட்டக் கல்லினதும், படிகளினதும் விகாரமகாதேவியின் உருவச் சிலை யினதும் உருவப்படி காணப்படுகின்றது.

**வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம்**

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கி வெளி நாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றது.

**ஆசிய அபிவிருத்தி வங்கி - 2ஆவது கடன்**

தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத் தின் கீழ் வெளிநாட்டுச் செலாவணிச் செலவை நிவர்த்தி செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியானது ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் 35 இலட்சம் ஐ. அ. டொலர் கடனின் பொருட்டு 1970, திசெம்பர் 1ஆந் திகதி ஒரு உடன் படிக்கைசெய்து கொண்டது.

**வருமானமும் செலவும்**

மத்திய வங்கியின் இவ்வாண்டு வருமானம் ரூ. 8,09,84,000 ஆகும். ஒதுக்குகளிற் சேர்க்கப்பட்டவையும், வங்கிக் கட்டடம், அலுவலகத் தள பாடம் என்பவற்றின் பெறுமானத் தேய்வுக்காகக் கழிக்கப்பட்டனவும் உட்படச் செலவு ரூ. 7,99,84,000 ஆகும். தேறிய இலாபமான ரூ. 10,00,000 நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 39(ஆ) பிரிவின் விதிகளுக்கமைய மிகைக் கணக்குக்குச் சேர்க்கப்பட்டது.

**வங்கி மேற்பார்வை**

நாணய விதிச் சட்டத்தின் 29 (1)ஆம் பிரிவின் கீழ் 1970இல் வங்கி மேற்பார்வைத் திணைக்களம், ஐந்து வர்த்தக வங்கிகளை ஆய்வு செய்தது; அத்துடன் முன்னர் தொடக்கப்பட்ட ஐந்து வங்கிகளின் ஆய்வுகளையும் நிறைவு செய்தது. மேலும் 1968ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கச் சட்டத் திருத்தப்பட்டவாறுன 1961ஆம் ஆண்டின் 65ஆம் இலக்க நிதிச்சட்டத் தின் 111ஆம் பகுதியின் தொழிற்பாட்டிற்குத் தொடர்புடைய பணிகளை இத்திணைக்களம் தொடர்ந்து ஆற்றியது. ஆசிய அபிவிருத்தி வங்கியினுலே தேயிலைத் தொழிற்சாலை நவீனமயமாக்கலுக்கு வழங்கப்பட்ட முதலாம், இரண்டாம் கொடுகடன் தொடர்பாக, மத்திய வங்கியினுல் வழங்கப்பட்ட மீள நிதியீட்டலுக்கு முன்னைய கடன்களின் கணிப்பீடு தொடர்பான பணியில் அபிவிருத்தி நிதிப் பிரிவு தொடர்ந்து ஈடுபட்டது. மத்திய வங்கியின் நடுத் தர, நீண்ட தவணைக் கொடுகடன் நிதியிலிருந்து கைத்தொழில், வர்த்தக நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட ஏனைய மீள நிதிக் கடன்கள்பற்றியும் இப்பிரிவு கணிப்பீடு செய்தது.